## உங்களின் செலுத்தும் காலங்கள்

பங்களிப்புகளை மேற்கொள்வதற்கு தொடர்ச்சியான காலம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. உங்களின் வசதியை பொறுத்து பங்களிப்புகளை நீங்கள் செலுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு மாதமோ அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது 6 மாதங்கள் அல்லது வருடத்திற்கு ஒரு முறையோ நீங்கள் செலுத்திக் கொள்ளலாம். அனைத்து பங்களிப்புகளும் உங்களது வங்கி கணக்கு மூலமாக நேரடியாக மேற்கொள்ளப்படும்.

## இந்தியாவிற்கு நீங்கள் திரும்பும் போது

இந்தியாவிற்கு நீங்கள் திரும்பும் போது R&R இல் சேமித்து வைக்கப்பட்டுள்ள உங்களது தொகை முழுவதையும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

NPS Lite கணக்கில் உள்ள சேமிப்புகள் PFRDA வால் வரைமுறைப்படுத்தப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் முதலீடு செய்யப்படும். மேலும் உங்கள் ஓய்வூதிய திட்டத்திற்கான முதலீடுகளை நீங்கள் தொடரலாம். நீங்கள் 60 வயதை அடைந்த உடன் NPS Lite கணக்கிலிருந்து உங்களுக்கான ஓய்வூதிய தொகையை வழக்கம் போல நீங்கள் பெறலாம்.

## தகவல்களை பெறுவதற்கான வழிகள்

**MGPSY** தொடர்பான கேள்விகள் அல்லது தகவல்களுக்கு,

தொடர்புகொள்ளுங்கள்
பாங்க் ஆ∴ப் பரோடா கிளை, இந்திய
தொழிலாளர் வள மையம்- UAE அலுவலகம்
3PM-7PM(வேலை நாட்களில்)
உதவி (இலவசம்) அழைப்பு:
***1800 113 090 (India)***, ***80046342 (UAE)***
*inf.mgpsy@moia.nic.in, help@iwrc-uae.com*

प्रवासी भारतीय कार्य मंत्रालय
Ministry of Overseas Indian Affairs
www.moia.gov.in

வெளிநாடு வாழ் இந்திய விவகாரங்கள் அமைச்சகம்
இந்திய அரசாங்கம்
9வது தளம், அக்பர் பவன்
புது தில்லி - 110 021
தொலைபேசி: 1800 113 090 (இலவச அழைப்பு)
மின்னஞ்சல்: inf.mgpsy@moia.nic.in
www.moia.gov.in

MAHATMA GANDHI
# PRAVASI SURAKSHA YOJANA

## மகாத்மா காந்தி பிரவாசி சுரக்‌ஷாயோஜனா

குடியேற்றங்கள் சரிபார்ப்பு தேவைப்படும *ECR* நாடுகளுக்கான பாஸ்போர்ட்டுடன் கூடிய வெளிநாடுகளில் வேலை செய்யும் இந்திய தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டம்

प्रवासी भारतीय कार्य मंत्रालय
Ministry of Overseas Indian Affairs
www.moia.gov.in

வெளிநாடு வாழ் இந்தியர்
விவகாரங்கள் அமைச்சகம் **(MOIA)**
இந்திய அரசாங்கம்

## MGPSY பற்றி

ECR நாடுகளுக்கு குடிபெயரும் இந்திய தொழிலாளர்களுக்காக MOIA வால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சமூக பாதுகாப்பு திட்டமாகும். இது ஒரு தன்னார்வ திட்டமாகும். அயல் நாடுகளில் (ECR) நீங்கள் வேலை செய்யும் போது, இலவச ஆயுட் காப்பீடு வசதியை இந்த திட்டத்தின் மூலம் பெறலாம் மேலும் உங்களது மறுகுடியேற்றத்திற்கான தொடர்ச்சியான சேமிப்புகளையும் மற்றும் வயதான காலத்திற்கான ஓய்வூதியத்திற்காகவும் நீங்கள் சேமிக்கலாம். MOIA வும் உங்களது ஓய்வூதியம், மறுகுடியேற்றம் மற்றும் இலவச ஆயுட் காப்பீடுகளுக்கு பங்களிப்பதன் மூலம் உங்களுக்கு ஆதரவளிக்கும்.

## MGPSY ஆல் நீங்கள் பெறும் பயன்கள்

**MGPSY** இல் இணையும் அயல் நாடுகளில் (ECR) பணிபுரியும் தொழிலாளர்கள் 3 முக்கிய பயன்கள் அடையவர்:

1. NPS-Lite திட்டம் மூலம் வயதான காலத்திற்கான ஓய்வூதிய பாதுகாப்பு
2. SEBI ஆல் வரையறுக்கப்பட்ட UTI AMC-ன் UTI மாதாந்திர வருவாய் திட்டம் மூலமாக திரும்புதல் மற்றும் மறுகுடியேற்றம் சேமிப்பு.
3. LIC லிருந்து ஆயுட் காப்பீடு திட்டம்

## MGPSY இல் சேருவதற்கு உங்களுக்கான தகுதிகள்

தங்களது பாஸ்போர்ட்டில் குடியேற்ற சோதனை தேவை முத்திரை வைத்திருக்கும், 18 முதல் 50 வயது வரை உள்ள இந்திய தொழிலாளர்கள் மற்றும் ECR நாடுகளில் தற்காலிக வேலை அல்லது ஒப்பந்த வேலை விசா வைத்திருந்து வேலைக்கு வேலைக்கு செல்பவர்கள் அல்லது செல்லப் போகிறவர்கள் **MGPSY** திட்டத்தில் சேர்ந்து கொள்ள தகுதி கொண்டவர்கள்

## அமைச்சகத்திலிருந்து வழங்கப்படும் இணை-பங்களிப்பு

| பெறுபவர் | ஒரு ஆண்டிற்கு அமைச்சம் வழங்கும் தொகை | ஒரு ஆண்டிற்கு பெறுபவர் பெறும் மொத்த சேமிப்பு | பெறுபவர் ஒரு ஆண்டிற்கு குறைந்தபட்ச சேமிப்பு |
|---|---|---|---|
| பெண் தொழிலாளர் | ரூ. 5,000 | ரூ.2,000+900 | ரூ.7,900 |
| ஆண் தொழிலாளர் | ரூ.5,000 | ரூ.1,000 +900 | ரூ.6,900 |

பங்கு கொள்பவர் *NPS Lite* மற்றும *R&R* திட்டம் என இரண்டிலும் எவ்வாறு செலுத்துகிறாரோ அதை பொறுத்து ***MGPSY*** இல் அமைச்சகத்தின் இணை பங்களிப்பு இருக்கும். இந்த இணை பங்களிப்பு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வரையோ அல்லது வேலை காலம் வரையில் எது முதலில் உள்ளதோ அது வரை மட்டும் செல்லும்.

## MGPSY இல் உங்களுக்கு சேவை வழங்குபவர்

அமைச்சம் மூலம் அமர்த்தப்பட்ட சேவை வழங்குபவர் மூலமே **MGPSY** சேவைகள் திட்டத்தில் சேருபவருக்கு வழங்கப்படும், இந்த சேவை வழங்குபவர்கள் குடிபெயர்பவர்களை பாதுகாப்பவர் (PoE) அலுவலகத்திலிருந்தோ அல்லது அவர்களது சொந்த அலுவலகத்திலிருந்து **MGPSY** இல் உங்களை இணைத்துக் கொள்வர். இந்த சேவையை வழங்கும் நிறுவனங்கள் (சேவை அளிப்பவர்) பற்றி அருகில் உள்ள PoE அலுவலகத்தை தொடர்பு கொள்ளுதல் அல்லது 1800-113090 என்ற **MGPSY** இலவச எண்ணில் அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

## MGPSY இல் சேருவதற்கான வழிமுறைகள்

1. சேவை வழங்குபவர் அமைத்துள்ள சேர்க்கை அலுவலகத்திற்கு செல்வதன் மூலம் சேரலாம்
2. பாஸ்போர் அளவிலான 3 புகைப்படங்கள் மற்றும் கையெழுத்திடப்பட்ட உங்களது பாஸ்போர்ட் மற்றும் முகவரி சான்றை தயவு செய்து கொண்டு வரவும்
3. உங்களுக்கு சரியான வங்கி கணக்கு உள்ளதா என்பதை சரிபார்த்து, பாஸ்புக் செக் புக்கை கொண்டு வரவும்
4. கணினி முறையில் உருவாக்கப்பட்ட **MGPSY** விண்ணப்பத்திலும் மேலும் **MGPSY** இல் உங்களது பங்களிப்பிற்கான விண்ணப்பத்திலும் கையெழுத்திட வேண்டும்
5. அயல் நாடுகளில் ஏற்கனவே வசிக்கும் தொழிலாளர்கள் இந்தியாவில் NRE/NRO வங்கி கணக்கை தொடங்க வேண்டும்
6. வங்கி கணக்கு இல்லாத பட்சத்தில், வங்கி கணக்கை திறக்க சேவை வழங்குபவர் உங்களுக்கு உதவி செய்வார்.

## வயதான காலத்திற்கான உங்களது ஓய்வூதியம்

**MGPSY** இல் உங்களுக்கான ஓய்வூதியம் PFRDA வழிமுறைப்படுத்தப்பட்ட NPS-Lite திட்டம் மூலம் செலுத்தப்படும். தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட இந்த சிறப்பு திட்டம் இந்திய தொழிலாளர்களின் தேவையை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது.

உங்களது வயதான காலத்திற்கு சேமிப்பதற்காக இந்த திட்டம் உங்களுக்கு உதவும். பொதுத் துறை ஓய்வூதிய நிறுவனங்களால் தொகைகளுடன் உங்களது சேமிப்புகள் நிர்வகிக்கப்படும். ரூ.1,000 முதல் ரூ.12,000 இடையில் உங்கள் ஓய்வூதிய கணக்கில் நீங்கள் சேமிக்கும் போது ஆணாக இருந்தால் ரூ.1,000 யும் பெண்ணாக இருந்தால் ரூ.2,000 யும் அமைச்சகத்திலிருந்து இணை-பங்களிப்பாக உங்களது NPS Lite கணக்கில் சேமிக்கப்படும்.

## உங்களது திரும்புதல் மற்றும் மறு குடியேற்ற (R&R) சேமிப்பு

இந்தியாவிற்கு நீங்கள் திரும்ப வேண்டிய கட்டாயத்தை புரிந்து கொண்டு, R&R என்ற சேமிப்பு வடிவிலான தேர்வை MGPSY உங்களுக்கு வழங்குகிறது. R&R கணக்கில் உள்ள உங்களது சேமிப்பு இந்தியாவில் பழமையான நிதி நிறுவனமான UTIAMC மூலம் நிர்வகிக்கப்படும். குறுகிய காலத்தில் மறுகுடியேற்றம் செய்யும் செலவுகளை எதிர்கொள்ள இந்த காலத்தில் சேமித்த தொகை உங்களுக்கு உதவி செய்யும். இந்த திட்டத்தில் நீங்கள் ரூ.4,000 ஐ சேமித்தால் அமைச்சகத்தின் இணை-பங்களிப்பாக ரூ.900 உங்களது R&R கணக்கில் சேமிக்கப்படும்.

## உங்களுக்கான ஆயுள் காப்பீடு

ஜனஸ்ரீ பிமா யோஜனா காப்பீட்டு திட்டத்தின் கீழ் **MGPSY** திட்டத்தில் சேரும் ஒவ்வொரு வெளிநாட்டு இந்திய தொழிலாளர்களுக்கும் இலவசமாக காப்பீடு வழங்கப்படும். ECR நாடுகளில் நீங்கள் வேலை செய்யும் காலம் வரை இந்த காப்பீடு இயக்கத்தில் இருக்கும். பின்வரும் பலன்களை இந்த திட்டத்தின் மூலம் நீங்கள் பெறலாம்.

- இயற்கையான இறப்புகளின் போது, உங்கள் குடும்பத்திற்கு LIC மூலம் ரூ. 30,000 இழப்பீட்டு தொகையாக
- வழங்கப்படும் அல்லது விபத்தின் மூலம் இறப்போ அல்லது நிரந்திர குறைபாடுகளோ ஏற்படின் ரூ. 75,000 வரை உங்களுக்கு அல்லது குடும்பத்திற்கு வழங்கப்படும்.
- விபத்தில் உங்களுக்கு பாதியளவு குறைபாடுகள் இருந்தால் ரூ. 37,500 வழங்கப்படும்.

## உங்களது சேமிப்பின் வளர்ச்சி

அமைச்சகம் மூலம் அமைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் மூலம் சேமிப்புகள் நிர்வகிக்கப்படும். முதலீடுகள் பெறும்பாலும் அரசாங்க பத்திரங்களில் முதலீடு செய்யப்படும் மற்றும் உங்களது சேமிப்பின் சிறிய பகுதி PFRDA - SEBI இன் விதிமுறைகள் படி பெரிய நிறுவன பங்குகளில் முதலீடு செய்யப்படும். இந்த 2 நிறுவனங்களும் இந்திய அரசாங்கத்தால் உங்களது விழிப்புணர்வு மற்றும் உரிமைகள்பாதுகாப்பதற்காக அமைக்கபட்டிருக்கும்.

NPS Lite மற்றும் UTI MIS இல் உங்களது சேமிப்புகள் எந்த விகிதத்தில் வளரும் என்பது நிச்சயிக்கப்படவில்லை அல்லது உத்திரவாதம் அளிக்கப்படவில்லை. இந்த திட்டங்களிலிருந்து கிடைக்கும் பலன்கள் சந்தை நிலையை பொறுத்தது.